18-04-2024
O.S.No. 357/2021

வா. சா. 1 வரலட்சுமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-(தொடர்ச்சி)

என் சகோதரி வெள்ளையம்மாளுக்கு 1956 ம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. அப்போது நான் பிறக்கவே இல்லை. திருமணம் ஆன நாள்முதல் என் சகோதரி வெள்ளையம்மாள் வத்தலக்குண்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் 14.3.2019 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2005 ம் ஆண்டு நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பை நான் மட்டும்தான் அனுப்பினேன் என்றால் சரியல்ல. என் அக்காவும் சேர்ந்துதான் அனுப்பினோம். என் அக்கா அனுப்பவில்லை என்றும் நான் மட்டும் தான் அனுப்பினேன் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா உயிருடன் இருக்கும்வரை அவர் சொத்தில் பாகம் கேட்கவில்லை என்றும், நானும் என் சகோதரி வெள்ளையம்மாளும் சொத்தில் பாகம் வேண்டாம் என்று வாய்க்கரலாக விடுதலை செய்து கொடுத்தோம் என்றும் தற்போது சொத்து அதிக விலைக்கு போவதால் தற்போது பாகம் கேட்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இருவரும் 1986 ம் ஆண்டு திருவுலச்சீட்டு போட்டு சொத்தை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றும் அதன் பின்னர் 3.11.1995 ம் தேதி அவர்கள் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பிரித்துக்கொண்டது தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அங்குதான் இருந்தேன், எனக்கு தெரியவில்லை. தாவாச் சொத்தில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் தாவா தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.04.18 16:49:52 +0530

Principal District Judge,
Dindigul.